**செய்தி வெளியீடு எண்:1126** **நாள்:16.11.2021**

**செய்தி வெளியீடு**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

உலக அளவில் கொலம்பியா நாட்டில்அண்மையில் நடைபெற்ற ரோலர் ஸ்கேட்டிங் விளையாட்டு போட்டியில் ஜூனியர் பிரிவில் தமிழ்நாட்டை சேர்ந்த வீரர் ஆனந்த்வேல் குமார் (சென்னை) வெள்ளி பதக்கம் வென்றார். அவர் இன்று கொலம்பியா நாட்டிலிருந்து தாயகம் திரும்பி சென்னை வந்தார். அவருடன் பல்வேறு பிரிவு போட்டிகளில் பங்கேற்ற வீரர் மற்றும் வீராங்கனைகள் வந்தனர். சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வீரர், வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு விளையாட்டுத்துறை சார்பில் பூச்செண்டு பொன்னாடை அளித்து உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணை மேலாளர் திரு. சாமுவேல் ராஜா டேனியல், முது நிலை மேலாளர் திருமதி. மெர்சி ரெஜினா, திரு.வீரபத்ரன், நேரு உள்விளையாட்டரங்க மேலாளர் திருமதி சுஜாதா மற்றும் விளையாட்டு சங்க பிரதிநிதிகள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய பயிற்சி மாணவர்கள் 25 பேர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர். வீரர் ஆனந்த வேல்குமார் அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் வெற்றி வீரர் மேம்பாட்டு திட்டத்தில் பயிற்சி பெற்று வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**